DINAMALAR

3 NOV 2022

PAGE 4

www.dinamalar.com
புதுச்சேரி
• வியாழன் • நவம்பர் 3 2022

# உலகில் தலைசிறந்த விஞ்ஞானிகள் பட்டியலில் புதுச்சேரி பல்கலை பேராசிரியர்கள் இடம் பிடிப்பு

**புதுச்சேரி, நவ. 3–**

உலக அளவில் தலைசிறந்த 2 சதவீத விஞ்ஞானிகள் பட்டியலில், புதுச்சேரி பல்கலை பேராசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர்.

உலகின் மிகப்பெரிய அறிவியல் சார்ந்த புத்தகங்கள் மற்றும் ஆராய்ச்சி இதழ்களை வெளியிடும் எல்சேவியர் பதிப்பகத்தால் அண்மையில் ஸ்டேண்ட்போர்டு பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில், 1996 முதல் தற்போது வரையிலான காலகட்டத்தை உள்ளடக்கிய, அவரவர் துறை சார்ந்த சாதனைகளின் பட்டியல் இடம் பெற்றுள்ளது. இந்த பட்டியலில், இந்தாண்டு புதுச்சேரி பல்கலைக் கழகத்தைச் சார்ந்த 11 விஞ்ஞானிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளது.

உலக அளவில் விஞ்ஞானிகளை உருவாக்கும் விகிதத்தில் இது கடந்த ஆண்டை விட 25 சதவீத அதிகமாகும்.

முந்தைய 12 மாத செயல் திறனின் அடிப்படையில் விஞ்ஞானிகளை வரிசைப்படுத்தும் மற்றொரு பட்டியலையும் எல்சேவியர் பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். இந்த வெளியீட்டில், புதுச்சேரி பல்கலையின் முன்னேற்றம் மிக அபரிமிதமாக உள்ளது. அதாவது கடந்த ஆண்டு 11 விஞ்ஞானிகளுடன் இருந்த புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் பட்டியல் இந்த ஆண்டு 17 ஆக் அதிகரித்துள்ளது.

இவ்விரு பட்டியலும் பேராசிரியர்கள் அப்பாசி (சுற்றுச்சூழல், ஆற்றல் மற்றும் செயல்முறை பாதுகாப்பு), ராமசாமி முருகன் (இயற்பியல்), பொற்செழியன் (இயற்பியல்), வடிவேல்முருகன் (நானோ தொழில்நுட்பம்), சுப்ரமணியன் (பொருட்கள்), பவுமிக் (இயற்பியல்), தஸ்னீம் அப்பாசி (சுற்றுச்சூழல்), கண்ணன் (உயிர் பொருட்கள்) ஆகியோரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் ஸ்டேண்ட்போர்டு பல்கலை நிபுணர்கள் குழு உதவியுடன் 2019 ம் ஆண்டிலிருந்து எல்சேவியர் பதிப்பகத்தால் உலகளவில் தலைசிறந்த 2 சதவீத விஞ்ஞானிகளை தரவரிசைப் படுத்தும் முறை தொடங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

DINAKARAN

3 NOV 2022

PAGE 14

# லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம்




புதுவை பல்கலைக்கழகத்தில் நடந்த லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வார நிகழ்ச்சியில் பேராசிரியர் குர்மீத்சிங் நேர்மை உறுதிமொழியை வாசித்தார்.

**புதுச்சேரி, நவ. 3:** புதுவை பல்கலைக்கழகத்தில் 31.10.2022 முதல் 6.11.2022 வரை லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது. இந்த விழிப்புணர்வு வாரத்தில் 'வளர்ந்த தேசத்திற்கு ஊழலற்ற இந்தியா' என்பது கருத்தாக முன்வைக்கப்பட்டுள்ளது. மத்திய கண்காணிப்பு குழுவின் ஆலோசனையின்படி 31.10.2022 அன்று புதுவை பல்கலைக்கழக ஜவஹர்லால் நேரு கலை அரங்கில் பல்கலைக்கழக ஆசிரியர்கள், அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங் நேர்மை உறுதிமொழியை வாசித்தார்.

விழிப்புணர்வு வார்த்தை கொண்டாடும் விதமாக மாணவர்கள் மற்றும் ஊழியர்களிடையே கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன.

கடந்த அக்டோபர் 31ம் தேதி நடைபெற்ற இந்த விழிப்புணர்வு வாரத்தில் பல்கலைக்கழக பதிவாளர் (பொ) அம்ரேஷ் சமந்தராய, ஆசிரியர்கள், அதிகாரிகள், ஆசிரியரல்லாத ஊழியர்கள் கலந்து கொண்டு 'வளர்ந்த தேசத்திற்கு ஊழலற்ற இந்தியா' ஒருமைப்பாடு உறுதிமொழியை வாசித்தனர்.

DINAMALAR

3 NOV 2022

PAGE 4

# மண்டலாபிஷேகம் நிறைவு விழா

புதுச்சேரி, நவ.3– வலம்புரி வித்யா விநாயகர் கோவில் மண்டலாபிஷேகநிறைவு விழாநடந்தது.

புதுச்சேரி பல்கலையில் உள்ள வலம்புரி வித்யா விநாயகர் கோவில் 34 ஆண்டுக்கு பிறகு புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடந்தது.

தொடர்ந்து மண்டலாபிஷேக விழா நடந்தது. இதன் நிறைவு விழாவில் கணபதி ஹோமம், யாக வேள்வி, கடம் புறப்பாடு, சங்காபிஷேகம் நடந்தது. துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை தாங்கி கோவில் வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டு பிரசாதம் வழங்கினார். விழாவில் பல்கலை பேராசிரியர்கள், ஊழியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.



புதுச்சேரி பல்கலையில் உள்ள வலம்புரி வித்யா விநாயகர் கோவில் மண்டலாபிஷேக நிறைவு விழாவில் துணைவேந்தர் குர்மீத் சிங் மரக்கன்றுகள் நட்டார்.